10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 01 அதிர்வு 263 ஞாயிற்றுக்கிழமை பெப்ரவரி 11 2018 ethirolimedia@gma… …21224 …48

## 27 வருடங்களின் பின் அமைதியான தேர்தல்

கொழும்பு, பெப். 11

நாட்டில் 27 வருடங்களுக்குப் பின்னர் அமைதியான உள்ளூராட்சி சபைத் தேர்தல் இடம்பெற்றுள்ளதாக தேர்தல்கள் கண்காணிப்பு அமைப்புகள் அறிவித்துள்ளன.

இம்முறை தேர்தலில் பெரும் குற்றச் செயல்கள் எவையும் இடம்பெறவில்லை. மக்கள் சட்டத்தை மதித்து காலையிலேயே தமது கடமைகளை நிறைவேற்றினர் என்றும் அந்த அமைப்புகள் சுட்டிக் காட்டின. (ச)



கிளிநொச்சி புன்னைநீராவி மக்கள் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் வாக்களிப்பதற்காக மாட்டு வண்டிலில் பயணித்திருந்தனர்.



# தெற்கில் மகிந்த எழுச்சி

கொழும்பு, பெப். 11

தெற்கில் பெரும்பாலான உள்ளூராட்சி சபைகளை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி கைப்பற்றியுள்ளது.

வடக்கு, கிழக்கில் சிங்களவர்கள் வாழும் பெரும்பாலான பகுதிகளிலும் மகிந்த ராஜபக்ஷவின் கட்சியே முன்னிலையில் உள்ளது.

மகிந்த ஆதரவாளர்கள் உத்தியோகபூர்வமான அறிவிப்புகள் வெளியாகும் முன்னதாக - வட்டார முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு வெற்றியைக் கொண்டாட ஆரம்பித்துவிட்டனர்.

இந்நிலையில் கால்டன் இல்லத்தில் இருந்த மகிந்த ராஜபக்ஷ 'ஏனையவர்களுக்கு எந்தப் பிரச்சினையும் ஏற்படாதவாறு - சமாதானமாக வெற்றியைக் கொண்டாடுமாறு" நள்ளிரவு வேளையில் தனது ஆதரவாளர்களுக்குத் தெரிவித்தார். (ச)

## இன்று தடை

கொழும்பு, பெப். 11

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் பெறுபேறுகள் வெளியான பின்னர், இன்று ஞாயிற்றுக்கிழமை ஊர்வலங்கள் மற்றும் கூட்டங்கள் நடத்த முழுமையாக தடைவிதிக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் 06▶

## தேர்தல் முடிவுகள் நண்பகலே நிறைவுறும்

கொழும்பு, பெப். 11

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகள் அனைத்தும் இன்று நண்பகல் 12 மணியுடன் நிறைவுபெறுமென தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் உத்தியோகபூர்வ முடிவுகள் நேற்றிரவு 10 மணி தொடக்கம் வெளியிடப்பட்டன.

எனினும் என்று நண்பகல் 12 மணிக்கே அனைத்து தேர்தல் முடிவுகளும் அறிவிக்கப்படும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய மேலும் தெரிவித்தார். (ச)

# தமிழர் தாயகம் எங்கும் கூட்டமைப்பு ஆதிக்கம்

## வடக்கில் த.தே.ம. முன்னணி கடும் போட்டி

யாழ்ப்பாணம், பெப்ரவரி 11

தமிழர் தாயகமான வடக்கு – கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே அமோக ஆதரவை வழங்கியுள்ளனர். ஆனாலும் இம்முறை உள்ளூராட்சி சபைத் தேர்தலில் களமிறங்கிய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வடக்கில் கடும் நெருக்கடியைக் கொடுத்துள்ளது.

உள்ளூராட்சி அதிகார சபைக்கான தேர்தல் 06▶

TNPF

## பருத்தித்துறை, சாவகச்சேரி நகர சபைகள் காங்கிரஸிடம்

யாழ்ப்பாணம், பெப். 11

பருத்தித்துறை, சாவகச்சேரி நகர சபைகளை அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கைப்பற்றியுள்ளது.

நேற்று வெளியான தகவல்களின் படி சாவகச்சேரி நகர சபையில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் 7 ஆசனங்களையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 3 ஆசனங்களையும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஒரு 06▶

## வேண்டுமென்றே தாமதிப்பா?

கொழும்பு, பெப். 11

உள்ளூராட்சி தேர்தல் முடிவுகளை அறிவிப்பதில் நீண்ட தாமதம் ஏற்பட்டது.

தேர்தல் முடிவடைந்ததும் வாக்குகள் எண்ணும் பணி மாலை 5 மணிக்கே நேற்று ஆரம்பமாகி விட்டன. ஆனால் இரவு 8 மணிக்கே வெளியாகும் என அறிவிக்கப்பட்ட தேர்தல் முடிவுகள் நள்ளிரவைத் தாண்டியும் வெளியிடப்படவில்லை. 12.38 மணிக்கு முதல் முடிவாக முல்லைத்தீவு 06▶

## யாழ். மாநகர சபை கூட்டமைப்பு வசம்

யாழ்ப்பாணம், பெப். 11

யாழ். மாநகர சபையின் ஆட்சியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கைப்பற்றியுள்ளது.

நேற்று நடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் யாழ். மாநகர சபையில் 15 ஆசனங்களைக் கைப்பற்றித் தனித்து ஆட்சி அமைக்கும் வல்லமையைப் பெற்றது.

தமிழ்த் தேசியப் பேரவையாகப் போட்டியிட்ட அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் 9 ஆசனங்களையும், ஈ.பி.டி.பி. 3 ஆசனங்களையும் கைப்பற்றியுள்ளன. (ச)

# நாடளாவிய ரீதியில் 70 வீதம் வாக்களிப்பு

## யாழிலேயே குறைவான வாக்களிப்பு

கொழும்பு, பெப். 11

நேற்று நடந்த உள்ளூராட்சித் தேர்தலில் 70 வீதமானோர் தமது வாக்குகளை அளித்துள்ளனர்.

நாடளாவிய ரீதியில் அதிகளவான வாக்குப் பதிவான மாவட்டங்களாக அநுராதபுரம், திருகோணமலை உள்ளன. இங்கு 85 வீதமானோர் தமது வாக்குகளை அளித்துள்ளனர். குறைந்த வாக்களிப்பு வீதம் பதிவான மாவட்டமாக யாழ்ப்பாணம் உள்ளது. இங்கு 62 வீதமானோர் வாக்குகளை பதிவு 06▶

# யாழில் 62 வீத வாக்களிப்பு: பாரிய வன்செயல்கள் இல்லை

யாழ்ப்பாணம், பெப். 11

நேற்று நடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் யாழ்ப்பாணத்தில் 62 வீதமானவர்கள் வாக்களித்தனர் என யாழ். மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் நா. வேதநாயகன் அறிவித்துள்ளார்.

சுமுகமான சூழலில் நடந்த இந்தத் தேர்தலில் யாழ். மாவட்ட மக்கள் ஆர்வத்துடன் வாக்களித்தனர். தேர்தல் அலுவலர்களிடம் இருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் 62 வீதமான மக்கள் வாக்களித்துள்ளனர்.

நெடுந்தீவுப் பிரதேச சபையில் 74.8 வீத வாக்குகள் பதிவாகின. இதுவே யாழ். மாவட்டத்தில் அதிகம் வாக்குப் பதிவான பிரதேச சபை. மிகக்குறைந்த வாக்களிப்பு பிரதேசம் நடந்த இடமாக வலி. வடக்குப் பிரதேச சபை 06▶

# உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வாக்களித்த முக்கியஸ்தர்கள்



எதிரொலி Ethiroli

ஞாயிறு, 11 பெப்ரவரி 2018 ethirolimedia@gmail.com

# கத்தி மேல் தான் இனி ஆட்சி

இத்தனை நாளும் நடந்த கூத்தின் முடிவுகள் வந்து விட்டன.

வடக்கில் பலரும் எதிர்பார்த்ததைப் போன்று, கூட்டமைப்பு பெரும்பாலான உள்ளூராட்சி மன்றங்களை தன் வசப்படுத்தி இருக்கிறது. ஆயினும் கடந்த காலங்களைப் போல, இலகுவான வெற்றியைக் கூட்டமைப்பால் பெற முடிந்திருக்கவில்லை. போதாக்குறைக்கு இரண்டு நகர–சபைகள் கூட்டமைப்பின் எதிர் அரசியல் புள்ளியான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியிடம் வீழ்ந்திருக்கிறது. யாழ்.மாநகரசபையையும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கைப்பற்றும் சந்தர்ப்பங்களே தென்பட்ட போதும், 10 ஆசனங்களைப் பிடித்து பலமான எதிர்கட்சியாக இடம் பிடித்துள்ளது. போனஸ் ஆசன விபரங்களின் பின்னர் இந்த ஆசன எண்ணிக்கை அதிகரிக்கலாம். இருப்பினும் , இப்படி மாநகரசபையில், கூட்டமைப்பின் ஆட்சியின் ஒவ்வொரு நகர்வையும், கண்கொத்திப் பாம்பாக அவதானித்து, அவற்றையெல்லாம், கேள்விக்கு உட்படுத்தி குடைச்சல் கொடுக்கும் ஆட்பலத்தோடு, சைக்கிள் சின்னக் காரர்களுக்கும் ஆசனம் கிடைத்தது 'வீட்டுக்' காரர்களுக்கு சிக்கலான விடயம் தான்.

ஏனெனில் என்னதான் தமிழ்த் தேசியப் பேரவை என்ற புதிய லேபிளை ஒட்டிவிட்டு, ஏதோ நாலைந்து பெரிய கட்சிகளின் கூட்டாகத் தம்மைக் காட்டிக் கொள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் முயன்றாலும், உண்மையில் அது ஒரு தனிக்கட்சி மட்டுமே. ஆனால் கூட்டமைப்பு என்பது இப்போது தமிழரசு, ரெலோ, புளொட் என்ற கட்சிகளின் கூட்டிணைவில் இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்தக் குட்டித் தேர்தல் அறிவிக்கப்படவிருந்த சமயத்தில், கூட்டமைப்பில் இருந்து ஈ.பி.ஆர்.எல்.எப் விலகியிருந்தது. அதே வழியில் புளொட்டும், ரெலோவும் விலக முயன்றிருந்தன. ஆயினும் அப்படி விலகிச் சென்றால், தம்முடைய அரசியல் எதிர்காலம் என்னவாகி விடுமோ என்ற அச்சத்தில், மீண்டும் வீட்டுக்குள் வந்து ஒட்டிக் கொண்டன. இப்போது யாழ்.மாநகரசபை உள்ளிட்ட, கூட்டமைப்புக் கைப்பற்றிய உள்ளூராட்சி சபைகளில் இந்தக் கட்சிகளின் உறுப்பினர்களும் அடக்கம். பெரும்பாலான சபைகளைக் கூட்டமைப்புக் கைப்பற்றிய போதும், ஒரு சில சபைகளைத் தவிர மற்றைய சபைகளில் எல்லாம், கத்தி மேல் நடப்பது போன்றே நிர்வாகம் செய்ய வேண்டிய நிலை கூட்டமைப்புக்கு ஏற்பட்டுள்ளது.ஏனெனில் தங்கள் கூட்டில் இணைந்திருக்கும் ரெலோ, புளொட் கட்சிகளைச் சேர்ந்தவர்களின் மனம் கோணும்படி இனியும் கூட்டமைப்பு நடந்து கொண்டால், அவர்களும் இதுதான் சந்தர்ப்பம் என்று, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியோடு ஐக்கியமாகிவிடக் கூடும். அப்படி நடந்தால், யாழ்.மாநகர சபை உள்ளிட்ட பெரும்பாலான சபைகளைக் கூட்டமைப்பு இழக்க வேண்டிவரும்.

"அப்படியேல்லாம் நடக்காது. முன்னரைப் போல வெளியேறிவிடுவோம்" என்று அவை பூச்சாண்டி காட்டக் கூடுமே தவிர, கூட்டமைப்பை விட்டு வெளியே செல்லும் துணிவு வராது என்று பலர் சொல்லக் கூடும். ஆனால், அரசியல் எதிர்காலமே இல்லாமல் போய்விடும், என்ற எண்ணத்தில் தான், ரெலோவும்., புளொட்டும் பம்மிக் கொண்டு இருந்தார்கள். ஆனால் கூட்டமைப்பில் இருந்து வெளியே வந்து, தமக்கான தனியிடத்தை, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்கட்சியால்பெற்றுக்கொள்ளமுடிகின்றதென்றால், தாமும் அப்படி மக்களோடு இறங்கி அரசியல் செய்தால், கூட்டமைப்புக்கு சவால் விடுக்குமளவுக்கு வெற்றிகளைக் குவிக்க முடியும் என்று வளரலாம் என்ற நம்பிக்கையை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு உள்ளூராட்சித் தேர்தலில் கிடைத்த வாக்குகளும், வெற்றிகளும் உணர்த்தி விட்டுள்ளன. அதனால் தமது கொள்கைக்கு விரோதமான காரியங்களில் தமிழரசுக் கட்சி நடந்து கொண்டாலும், 'அழு–தாலும் பிள்ளையை அவள் தானே சுமக்க வேண்டும்" என்கிற கதையாக சகித்துக் கொண்டிருக்காமல், சட்டென வெளியேறினால், அது மாநகரசபை உட்பட பல இடங்களில் பெரும் ஆட்சி மாற்றத்தைக் கூட நிகழ்த்தலாம். ஆனால் அதற்கான திராணி, அடுத்த தேர்தல் வரும்வரை ரெலோவுக்கோ, புளொட்டுக்கோ கிடையாது என்பதும், சுமந்திரன் சொல்லும் மந்திரத்துக்கே ஆடப்பழகியவர்கள் என்பதாலும், கூட்டமைப்புக் கொஞ்சம் ஆறுதல் பெருமூச்சு விட்டுக் கொள்ளலாம்.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# ஓட்டோவுக்குள் பாய்ந்தது மோ.சைக்கள்: ஒருவர் பலி

கொழும்பு, பெப். 11

அதிக வேகமாகப் பயணித்த மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டிக்குள் நேருக்கு நேராகப் பாய்ந்து விபத்துக்குள்ளானதில் ஒருவர் பலியானார்.

இந்தச் சம்பவம் எப்பாவல பிரதேசத்திலேயே நேற்று இடம் பெற்றுள்ளது.

முச்சக்கவண்டி சாரதியின், தலையில் மோட்டார் சைக்கிள் விழுந்ததால் அவர், சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர்கள் இருவரும் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். (ச)

# பௌசியின் பேர்த்தி மீது தாக்குதல்!

கொழும்பு, பெப். 11

நீதிமன்ற வளாகத்தினுள் தாம் தாக்கப்பட்டார் என அமைச்சர் ஏ.எச்.எம்.ஃபௌசியின் பேர்த்தியும் சட்டத்தரணியுமான ஃபாத்திமா ஹஃப்ஸா நீதிமன்ற பொலிஸிலும் பெண்கள் மற்றும் குழந்தைகள் பிரிவிலும் குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுக்குப் பாதுகாப்பு வழங்கும் தேசிய அதிகார சபையிலும் பதிவுசெய்துள்ளார்.

இத்தாக்குதலை, பிணையில் வெளி வந்திருக்கும் தனது முன்னாள் கணவரும் வைத்தியருமான ஷாஸ்லி மௌஜூத்தே நடத்தியிருப்பதாகவும் அவர் தனது புகாரில் தெரிவித்துள்ளார்.

தமது வயிற்றில் குத்தியதாகவும் கொலை செய்துவிடுவதாக மிரட்டியதாகவும் மௌஜூத் மீது ஹஃப்ஸா தெரிவித்துள்ளார். தாக்குதல் இடம் பெற்ற சிறிது நேரத்தில் ஹஃப்ஸா தேசிய வைத்தியசாலையில் மருத்துவ பரிசோதனைகளுக்காக அனுமதிக்கப்பட்டார்.

# நெல் இல்லாத விவசாய உற்பத்தியை ஊக்குவிக்க அரசாங்கம் திட்டம்

கொழும்பு, பெப். 11

இலங்கையில் நெல் அல்லாத விவசாய உற்பத்திகளை ஊக்குவிக்கும் திட்டமொன்றை விவசாய அமைச்சு முன்னெடுத்துள்ளதாக உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்திக்கான அமைப்பின் செயற்திட்டப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தில் கொய்யா, மிளகாய், பாகற்காய், பப்பாசி, வெங்காயம், நிலக்கடலை, அன்னாசி, திராட்சை போன்ற பயிர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, அனுராதபுரம், பொலன்னறுவை, மட்டக்களப்பு, மொனராகலை, மாத்தளை ஆகிய 7 மாவட்டங்களில் இந்த செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# மாந்தை கிழக்கு கூட்டமைப்பு வசம்

முல்லைத்தீவு, பெப். 11

முல்லைத்தீவின் மாந்தை பிரதேச சபையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி 1,836 வாக்குகளைப் பெற்று 6 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது.

ஐக்கியதேசியக் கட்சி 1505 வாக்குகளைப் பெற்று 4 ஆசனங்களையும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 523 வாக்குகளைப் பெற்று 2 ஆசனங்களையும், ஈ.பி.டி.பி. 192 வாக்குகளைப் பெற்று ஒரு ஆசனத்தையும் கைப்பற்றியுள்ளன.

இதன்மூலம் மாந்தைப் பிரதேச சபையில் தனித்து ஆட்சி அமைக்கும் பலத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பெற்றுள்ளது. (ச)

# அம்பலாங்கொடை மகிந்த கட்சிக்கு

கொழும்பு, பெப். 11

காலி மாவட்டத்தின் அம்பலாங்கொடை நகர சபைத் தேர்தல் முடிவுகளின்பா ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 6698 வாக்குகளைப்பெற்று 10 ஆசனங்களைக் கைப்பற்றிப் பெரும்பான்மையை நிரூபித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி 4260 வாக்குகளுடன் 6 ஆசனங்களையும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 1796 வாக்குகளைப் பெற்று 3 ஆசனங்களையும் மக்கள் விடுதலை முன்னணி 1062 வாக்குகளைப் பெற்று 2 ஆசனங்களையும் கைப்பற்றியுள்ளன. (ச)

# தெல்லிப்பழை அம்மன்: பிரதமகுரு இறைபதம்

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கேவி தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ வா. அகிலேஸ்வர குருக்கள் 57ஆவது வயதில் நேற்று சிவபதமடைந்தார்.

குருவின் இறுதிக்கிரிகைகள் இன்று காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# விடுதலைப் புலிகளின் கறுப்பு பணத்தை வெள்ளையாக்கும் முயற்சியா பிணைமுறி?

## ஹேமகுமார நாணயகார கேள்வி

கொழும்பு, பெப்.11

மத்திய வங்கி பிணைமுறி மோசடியில் ஈடுபட்ட பெர்பச்சுவல் நிறுவனம் தமிழீழ விடுதலைப் புலிகளின் கறுப்புப் பணத்தை வெள்ளையாக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்ததா என்ற சந்தேகம் இப்போது எழுந்துள்ளது.

புலிகள் அவர்களின் வெளிநாட்டுப் பணத்தை வெள்ளையாக்கும் நோக்கில் இல்ங்கையில் பலரின் ஊடாக பல வர்த்தகத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர் என்று தென் மாகாண ஆளுநர் ஹேமகுமார நாணயக்கார தெரிவித்துள்ளார்.

சிங்கள தொலைக்காட்சி ஒன்றில் இடம்பெற்ற அரசியல் விவாத நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியவை வருமாறு:

மத்திய வங்கி பிணை முறி விவகாரம்தான் இன்று நாட்டை உலுக்கிக் கொண்டு இருக்கின்றது.இதற்குக் காரணமானவர் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜூன மஹேந்திரன் தான். ஜனாதிபதியின் எதிர்ப்பையும் மீறி அவர் பிரதமரால் நியமிக்கப்பட்டார். அவரது பதவிக் காலம் முடிந்து இரண்டாவது தடவையும் அவரை நியமிக்குமாறு பிரதமர் கூறினார். இருந்தும்,ஜனாதிபதி மறுத்துவிட்டார். பிறகு ஐக்கிய தேசிய கட்சியின் 10 லட்சம் வேலைத் திட்டத்துக்கு பொறுப்பாக அவரை பிரதமர் நியமித்தார்.

இந்த மோசடிமூலம் பெறப்பட்ட பணத்தைக் கொண்டு அர்ஜூன ஆலோசியஸ் தொலைக்காட்சி மற்றும் பத்திரிகை நிறுவனங்களை தொடங்கியுள்ளார். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை நோக்காகக் கொண்டே அந்த நிறுவனங்களை தொடங்கியுள்ளார்.

இது தொடர்பில் பல கோணங்களில் நோக்கப்படுகின்றது. இந்த பிணை முறி மோசடியில் ஈடுபட்ட பெர்பச்சுவல் நிறுவனம் தமிழீழ விடுதலைப் புலிகளின் கறுப்புப் பணத்தை வெள்ளையாக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்ததா என்ற சந்தேகம் இப்போது எழுந்துள்ளது. புலிகள் அவர்களின் வெளிநாட்டுப் பணத்தை வெள்ளையாக்கும் நோக்கில் பலரின் ஊடாக பல வர்த்தகத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பிணை முறி மோசடி தொடர்பில் கோப் குழு,ஜனாதிபதி ஆணைக்குழு மற்றும் பிரதமரின் குழு என பல குழுக்கள் விசாரணை நடத்திய போதிலும் புலிகளின் பணத்தை வெள்ளையாக்கும் செய்ற்பாட்டில் பேர்பச்சுவல் நிறுவனம் ஈடுபட்டதா என்ற கோணத்தில் விசாரணை நடத்தவில்லை. இனி அந்தக் கோணத்திலும் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று மக்கள் விரும்புகின்றனர்.

ஊழலை முற்றாக ஒழிக்கும் நோக்கில் ஜனாதிபதி முற்றாக இறங்கியுள்ளார்.அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கில் அவர் அதைச் செய்யவில்லை. இலங்கையில் எதிர்காலத்தில் தூய்மையான அரசியலை உருவாக்கும் வேலைத்திட்டமாகும் அது.

## இன்று நாளும் கோளும்

11.02.2018 ஞாயிற்றுக்கிழமை ஏவிளம்பி வருடம் தை மாதம் 29 ஆம் நாள்

ஏகாதசி பி.ப. 07.57 மணி வரை | மூலம் 01.15 வரை | சித்தயோகம்

இராகுகாலம் 04.30 - 06.00 | சுபநேரம் மு.ப. 06.00 - 07.00 | மகண்டம் மு.ப. 112.00 - 01.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பக்தி | பரிசு | பயம் | பகை | பரிவு | பாராட்டு | பிரீதி | ஒய்வு | வரவு | தடங்கல் | வெற்றி | இன்சொல் |

# வீட்டுச் சின்னத்துக்கு புள்ளடியிட்டு வாக்குப் பெட்டியருகே பிரசாரம்

## ஈவினை வாக்களிப்பு நிலையத்தில் மோசடி

யாழ்ப்பாணம், பெப். 11

வீட்டுச் சின்னத்துக்கு நேரே புள்ளடியிட்ட வாக்குச் சீட்டுக்களை வாக்குப் பெட்டி அருகே வைத்து வாக்காளர்களைக் குழப்பிய சம்பவம் ஒன்று புன்னாலைக்கட்டுவனில் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளரின் கமெராவை பறித்து சுன்னாகம் பொலிஸார் அடாவடியில் ஈடுபட்டனர் எனவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

வாக்களிப்பு நிலையமாக செயற்பட்ட புன்னாலைக்கட்டுவன் - ஈவினை வடக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது:

வாக்களிப்பு நிலையத்தின் உள்ளே வாக்குப் பெட்டியின் அருகே வீட்டுச் சின்னத்துக்கு நேரே புள்ளடியிட்ட வாக்குச் சீட்டுக்கள் வைக்கப்பட்டிருந்தன. இதனால் வாக்களிக்க வந்தவர்கள் குழம்பிப் போயினர். பலர் வாக்களித்துச் சென்ற நிலையில் வாக்களிக்கச் சென்ற ஒருவர் இதுபற்றி அங்கு நின்ற பொலிஸாரிடம் தெரிவித்தார்.

இதையடுத்து அங்கு குழப்பம் ஏற்பட்டது. இது தொடர்பில் செய்தி சேகரிக்க சென்ற ஊடகவியலாளர் செ. ரவிசாந்த் என்பவரை செய்தி சேகரிக்க விடாது தடுத்த பொலிஸார். அவரின் கமெராவையும் பறித்துள்ளனர். அச்சமயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமகாண சபை உறுப்பினரான பா.கஜதீபனும் அங்கு நின்றிருந்தார் என ஊடகவியலாளர் தெரிவித்தார்.

கூட்டமைப்புக்கு சார்பாக செயற்பட்ட ஊழியர்களை வெளியேற்றுமாறு வாக்காளர்கள் வலியுறுத்தியதைத் தொடர்ந்து, அவர்களை வெளியில் நின்று கடமையாற்றுமாறு பொலிஸார் தெரிவித்தனர். இதையடுத்து அங்கு சுமுகநிலை ஏற்பட்டது.

இதேவேளை அப்பகுதியில் நின்று வாக்களிக்க வருபவர்களுக்கு மதுபானம் வழங்கிய கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் மக்களால் விரட்டியடிக்கப்பட்டனர் என்றும் கூறப்பட்டது. (ச)

# கொடிகாமத்தில் வேட்பாளர் கைது

சாவகச்சேரி, பெப். 11

மாதிரி வாக்குச் சீட்டுக்கள், துண்டுப் பிரசுரங்களுடன் வேட்பாளர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

பிரசுரங்களை அதிகாலை வேளை கொண்டு சென்றபோதே கொடிகாமம் பொலிஸார் அவரைக் கைது செய்தனர்.

மீசாலையைச் சேர்ந்த 26 வயதானவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். இந்தத் துண்டுப்பிரசுரங்களை தாம் எரியூட்டவே கொண்டு சென்றதாக அவர் பொலிஸாருக்குத் தெரிவித்துள்ளார்.

கைதான வேட்பாளரை நீதிமன்றில் முற்படுத்தப் பொலிஸ்ார் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். (ச)

# கசிப்புக் கொடுத்தவர் முல்லைத்தீவில் கைது

முல்லைத்தீவு, பெப். 21

வற்றாப்பளையில் வாக்காளர்களுக்கு சட்டவிரோதமான கசிப்பு மற்றும் கள்ளு விநியோகித்த ஓர் அரசியல் கட்சியின் ஆதரவாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர், கட்சி ஒன்றின் வற்றாப்பளை வட்டரா வேட்பாளர் ஒருவரின் ஆதரவாளர் என அறியமுடிகின்றது.

முள்ளியவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# முல்லைத்தீவில் விபத்து

யாழ்ப்பாணம், பெப். 11

முல்லைத்தீவு, நந்திக்கடல் சந்திக்கு அருகில் இடம்பெற்ற வாகன விபத்தில் முல்லைத்தீவு உதவி தெரிவத்தாட்சி அலுவலர் குமாரசுவாமி முரளிதரன் காயமடைந்துள்ளார்.

அவர் பயணித்த கெப் வண்டி நேற்று அதிகாலை வீதியை விட்டு விலகி விபத்து ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் அவருக்கு பாதுகாப்பிற்காக வழங்கப்பட்டிருந்த இரண்டு பொலிஸ் அதிகாரிகளும் சாரதியும் சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

உதவி தெரிவத்தாட்சி அலுவலர் குமாரசுவாமி முரளிதரன் மற்றும் காயமடைந்த ஏனையவர்கள் சிகிச்சைக்காக மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ச)

# முல்லைத்தீவில் 72 வீத வாக்களிப்பு




முல்லைத்தீவு, பெப். 11

முல்லைத்தீவு மாவட்டத்தில் 72 சதவீதமான வாக்குகள் பதிவாகின என அரச அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அத்துடன் மாவட்டத்தில் பாரதூரமான வன்செயல்கள், அசம்பாவிதங்கள் எவையும் ஏற்படவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நேற்று நாடு முழுவதும் நடைபெற்றது. முல்லைத்தீவு மாவட்டத்தில் 4 பிரதேச சபைகளுக்கு 67 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக தேர்தல் இடம்பெற்றது.

134 வாக்களிப்பு நிலையங்களிலும் காலை 7 மணி தொடக்கம் மக்கள் பெருவாரியாக வாக்குகளைப் பதிவு செய்தனர். மாலை 4 மணிக்கு வாக்குப் பதிவு முடியும் வரை 72 வீதமானோர் தமது வாக்குகளைப் பதிவு செய்திருந்தனர். விசேட பொலிஸ் பாதுகாப்புக்களுடன் நடந்த இந்தத் தேர்தலில் தேர்தல் விதிமீறல்கள் சிறியளவில் இடம்பெற்ற போதும் பெரும் அசம்பாவிதம் ஏதுமின்றி அமைதியான முறையில் வாக்களிப்பு நடந்ததாக அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (ச)

# பேரவையின் கண்காணிப்பாளர்கள் நிலையத்திலிருந்து வெளியேற்றம்

யாழ்ப்பாணம், பெப். 11

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்ட தமிழ்த் தேசியப் பேரவையினர் பொலிஸாரின் உதவியுடன் வெளியேற்றப்பட்டனர் என அக்கட்சி முறைப்பாடு செய்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாநகர மேயர் வேட்பாளர் இ.ஆர்னோல்ட்டின் உத்தரவிலேயே அவர்கள் 3 தடவைகள் வெளியேற்றப்பட்டனர் என தேர்தல்கள் வன்முறை தடுப்பு அதிகாரி அகிலனிடம் அக்கட்சி முறையிட்டுள்ளது.

இந்த விடயம் குறித்து அகிலன் குறித்த வாக்களிப்பு நிலையத்துக்கு தொலைபேசியில் அறிவுறுத்தல் வழங்கியபோதும், அதன் பின்னரும் ஒரு கண்காணிப்பாளர் நிலையத்துக்கு வெளியே அனுப்பப்பட்டார் எனக் கூறப்படுகின்றது. (ச)

# கூட்டமைப்பு - ஐ.தே.க. காரைநகரில் முறுகல்


யாழ்ப்பாணம், பெப். 11

வாக்களிக்கச் சென்ற மக்களிடம் பிரசாரம் செய்தமை தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் கூட்டமைப்பு வேட்பாளர்கள் இடையே முறுகல் நிலை ஏற்பட்டது.

காரைநகரில் வாக்களிக்கச் சென்ற மக்களிடம் ஐக்கிய தேசியக் கட்சியினர் தமக்கு வாக்களிக்குமாறு பிரசாரத்தில் ஈடுபட்டனர் என்று கூறப்படுகின்றது.

அச்சமயம் அங்கு வந்த கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் ஐக்கிய தேசியக் கட்சியினருடன் வாதத்தில் ஈடுபட்டார். இதையடுத்து இரு சாரரிடையேயும் முரண்பாடு ஏற்பட்டு முறுகல் நிலை ஏற்பட்டது.

எனினும் பிரசாரத்தில் ஈடுபட்ட ஐக்கிய தேசியக் கட்சியினர் அங்கிருந்து கலைந்து சென்றனர். இச்சம்பவம் தொடர்பில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பவ்ரல் அமைப்பிடம் முறைப்பாடு செய்துள்ளார். (ச)



# கழுத்து அறுப்பது எங்கள் உரிமை தலையை நீட்டுவது உங்கள் கடமை

இலங்கை சுதந்திரம் அடைஞ்சதாக் கேள்வி. அதை ஒருக்காப் பாக்க வேணும். ஆனால் சுதந்திரம் அடைஞ்சதெண்டு சொல்லி வருசா வருசம் அதைக் கொண்டாடினம். இடையிலை கொஞ்ச நாள் ஜே.ஆர். சுதந்திரம் இல்லை எண்ட மாதிரி அதைக் கொண்டாடாமல் குடியரசு தினத்தைக் கொண்டாடினவர். பிறகு வந்த ஆக்கள் சொல்லிச்சினம். சுதந்திர தினத்தைக் கொண்டாடாமல் விட்டால் இலங்கையிலை சுதந்திரம் இல்லை எண்டு நினைச்சிடுவினம் மற்றவை எண்டு சொல்லிப்போட்டுத் திருப்பி சுதந்திர தினத்தைக் கொண்டாடத் துவங்கிவிட்டினம். அப்பிடி எல்லா இடத்திலையும் சுதந்திர தினத்தைக் கொண்டாடேக்கை லண்டனிலை உள்ள எம்பசிலையும் கொண்டாடினவை. அப்ப அங்கை நிண்ட தமிழ் ஆக்கள் சுதந்திர தினத்தைக் கொண்டாடுறதுக்க எதிரா ஒரு ஆர்ப்பாட்டத்தை நடத்தினவை. அதை அந்த எம்பசியிலை பாதுகாப்புக்காக நிண்ட ஆமிக்காரர் கண்டிட்டு வெளியிலை வந்து அங்கை நிண்ட தமிழ் ஆக்களைப் பாத்து தன்ரை கையாலை தன்ரை கழுத்திலை கையை வைச்சு "புலிக்கு ஆதரவாக் கத்தினால் கழுத்தை அறுப்பன்" எண்டமாதிரி சைகையாலை காட்ட அங்கை நிண்ட எங்கடை ஒண்டு "டப்" எண்டு கான்போனிலை படம் எடுத்துப்போட்டுது. எடுத்தால் அடுத்தது என்ன நடந்திருக்கும் எண்டு தெரியுந்தானே? உடனை நெற்றிலை அவை போட, அண்டைக்கு உது தான் எல்லா இடத்திலையும் கதையாப் போச்சுது. இது இஞ்சை உள்ள அரசாங்கத்திலை இருக்கிற மைத்திரி தொட்டு எல்லாருக்கும் தலையிடியாப் போச்சுது. லண்டனிலையும் உவரை உடனை வெளியிலை போக்காட்ட நடவடிக்கையளை எடுக்கத் துவங்கி விட்டினம். மைத்திரி அரசாங்கத்துக்குச் "சீ" எண்டு வெக்கமாப் போச்சுது. என்னெண்டு சமாளிக்கப் போறம் எண்டு யோசிச்சுப் போட்டு உடனை சொல்லிச்சினம் அவர் தன்ரை உடுப்பிலை இருக்கிற சிங்கக் கொடியைக் காட்டிச் சொன்னவராம் இனித் தமிழ் ஈழம் இல்லை. எல்லாருக்கும் ஒரு நாடுதான் இருக்கு எண்டு.

பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்து, பொய்யிலே நீந்தித் திளைக்கிற மகிந்த பெருமான் அதுக்கு ஒரு புது விளக்கத்தைச் சொல்லி இருக்கிறார். அவர் கன நாளாத்தொண்டைப் பக்கத்தைச் சொறியேல்லையாம். அண்டைக்கு உள் தொண்டை கரகத்தப்படியால் வெளித்தொண்டையைச் சொறிஞ்சவராம் - எண்டு.

பிறகு என்ன செய்தினமெண்டால் அந்த கழுத்திலை கை வைக்கிற படத்தை எடுத்துக் கொம்பியூட்டரிலை போட்டு அவர் தன்ரை பிறத்தி விரலாலை தொண்டையைச் சொறியிறமாதிரி செய்து போட்டிட்டு அதுக்கு ஒரு புது வியாக்கியானமும் சொல்லி இருக்கினம்.

உவன் சண்டை நடக்கேக்கை முள்ளிவாய்க்காலிலை நிண்டு வடிவா சனத்தைக் கொண்டபடியாலைதான் அவரை "குட் போய்" எண்டு அரசாங்கம் லண்டனுக்கு அனுப்பினவை. அப்ப குட் போய் என்ன செய்வர்? குட் போயாத் தானே இருக்கப் பாப்பர். அப்ப அவர் இன்னும் எத்தினை தமிழற்றை தலையை எடுக்கலாமெண்டு தானே பாப்பர். அவற்றை பழக்க தோசம் தான் நிக்கிறது லண்டனிலை எண்டதை மறந்து கழுத்திலை கை வைச்சிட்டார்.அவர் தமிழ் ஆக்களின்ரை கழுத்தை அறுப்பன் எண்டு சொன்னது, இப்ப அவற்றை கழுத்துக்குக் . கயிறாப் போச்சுது. அவற்றை கழுத்துக்கு மட்டுமில்லை மைத்திரிக்கும் உதாலை கெட்டபேரெல்லே? வேலைக்கு எண்டு போனனீ, எம்பசிக்குப் பாதுகாப்புக் கெண்டு செக்குறுட்டி வேலை பாக்க எண்டு போனனீ அங்கை போய் ஏன் ஆமி வேலை பாத்தனீ? உன்னைச் சொல்லிக் குற்றமில்லை. முதலாவது உன்ரை பழக்கதோஷம். இரண்டாவது சுதந்திரதினக் கொண்டாட்டத்துக் கெண்டு நீ கன நாளைக்குப் பிறகு போட்ட ஆமி உடுப்பு. அந்த ஆமி உடுப்புக்கை போன உடனை ஆமிக் குணம் உனக்கு வந்திட்டிது. அது எவ்வளவு ஆபத்தான விசியம் எண்டு தெரியுமே?

எப்பவும் ஒராள் தன்ரை வேலையைத் தான் பாக்க வேணும். தேவை இல்லாத வேலையைப் பாக்கப்பிடாது. இப்ப லண்டனிலை உன்னை வெளியிலை போட்டாங்கள் எண்டால் பிறகு உன்ரை சீவியத்திலை லண்டன் எண்டதை உலகப் படத்திலை கூட உன்னாலை பாக்கேலாமல் போம். அப்ப பேசாமல் செய்ததுக்கு மன்னிப்புக் கேட்டிட்டு இரு - எண்டு சொல்ல, அவர் சொன்னாராம் "பறவாயில்லை. அந்த வேலை போனால் எனக்கு இன்னும் எத்தினை வேலை எடுக்கலாம். இலங்கையிலை எத்தினை நானாமாற்றை இறைச்சிக்கடை இருக்கு. அங்கை கழுத்தறுக்கிற வேலை கனக்க இருக்கு. அவையோடை போய் நான் ஜொயின் பண்ணுவன்" எண்டவராம்.

இனிமேல் தன்னும் மைத்திரி பாட்டி தன்ரை ஆக்களை வெளிநாட்டிலை வேலைக்கு அனுப்பேக்கை கொஞ்ச நஞ்சமாவது படிச்சதை அனுப்ப வேணும். கசாப்புக் கடையிலை வேலை செய்ய வேண்டியதை எல்லாம் மரியதையான வேலைக்கு அனுப்பாதையுங்கோ. மானம் கெட்டுப் போம்?

- வில்லங்கம் விநாசி

## வாக்களிக்கச் சென்றவர் விபத்தில் உயிரிழப்பு




கொழும்பு, பெப். 11

முதல் தடவையாக வாக்களிக்கச் சென்ற இளைஞர் ஒருவர் பஸ்ஸின் மிதிபலகையில் இருந்து தவறி வீழ்ந்து உயிரிழந்தார்.

கொழும்பு - அவிசாவளை - பிபிலிஓயா பிரதேசத்தில் நடந்த இந்த சோக சம்பவத்தில் லக்சித தேனுக பெரேரா என்ற 19 வயது இளைஞரே உயிரிழந்தார்.

இச்சம்பவம் தொடர்பில் இலங்கை போக்குவரத்து சபை பஸ்ஸின் சாரதி மற்றும் நடத்துநர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவிசாவளை வைத்திய சாலையில் இளைஞரின் சடலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ச)

## வாக்களிப்பு நிலையத்தில் மக்களை எச்சரித்த வேட்பாளர்

யாழ்ப்பாணம், பெப். 11

தமக்கு வாக்களிக்காவிடின் சமுர்த்தி உதவியை நிறுத்துவோம் என அரச கட்சி வேட்பாளர் ஒருவர் எச்சரித்தமையால் பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர்.

யாழ். ஒஸ்மானியா கல்லூரி வாக்களிப்பு நிலையத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வாக்களிப்பு நிலையத்துக்கு சென்ற அரச கட்சி வேட்பாளர் வாக்களித்துக் கொண்டிருந்த பொதுமக்களுக்கு இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

இந்த அச்சுறுத்தல் குறித்து அங்கு கடமையில் இருந்த பொலிஸார் கண்டுகொள்ளவில்லை என்றும், வேட்பாளரின் அச்சுறுத்தலால் தமது உரிமைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் மக்கள் கருத்து வெளியிட்டனர். (ச)

## கூட்டமைப்பு வேட்பாளர் ஆதரவாளருடன் கைது

மானிப்பாய், பெப். 11

உள்ளூராட்சி சபைத் தேர்தல் வாக்களிப்பு தினமான நேற்றும் பிரசாரத்தில் ஈடுபட்ட வேட்பாளரையும் அவரது ஆதரவாளரையும் மானிப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தேர்தல் நடைபெற்ற சமயம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடும் சின்னம் அச்சிடப்பட்ட பிரசுரங்களை வீடுவீடாகச் சென்று விநியோகித்தனர் என்ற குற்றச்சாட்டிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதான இருவரும் சண்டிலிப்பாயைச் சேர்ந்தவர்களாவர். இருவரையும் யாழ். நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச)

## ஈ.பி.டி.பி. வேட்பாளர் மீது கூட்டமைப்பினர் தாக்குதல்!

யாழ்ப்பாணம், பெப். 11

ஈ.பி.டி.பி. வேட்பாளரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளரை தாக்கினார் எனப் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை - தம்பாட்டியில் போட்டியிடும் ஈ.பி.டி.பி. வேட்பாளர் மீதே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அவர் வீட்டில் இருந்த சமயம் ஆதரவாளர்களுடன் சென்ற கூட்டமைப்பு வேட்பாளர் அவரைத் தாக்கினார் என்று கூறப்படுகிறது.

இத்தாக்குதலில் காயமடைந்த ஈ.பி.டி.பி. வேட்பாளர் ஊளர்காவற்றுறை வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் குறித்து ஊர்காவற்றுறைப் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ச)

புள்ளடியிட்ட வாக்குச்சீட்டை

## படம்பிடித்த இருவர் கைது



கொழும்பு, பெப். 11

வாக்கெடுப்பு நிலையத்தில் புள்ளடியிட்ட வாக்குச் சீட்டைப் படம் பிடித்த இருவர் கைது செய்யப்பட்டனர்.

கண்டி- பூஜாபிட்டிய, களுத்துறை- அளுத்கம பிரதேசங்களை சேர்ந்த இளைஞர்கள் இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்கள் இருவரும் சமூகவலைத்தளத்தில் படங்களைப் போடுவதற்காகவே கைபேசி கமெராவைப் பயன்படுத்தி படம் எடுத்துள்ளனர்.

கைதான இருவரின் கைபேசிகளையும் பறிமுதல் செய்த பொலிஸார், இருவரையும் கடுமையாக எச்சரித்து பிணையில் விடுவித்தனர். இருவரையும் நீதிமன்றில் முற்படுமாறும் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. (ச)

## ஓட்டோ மோதியதில் சிறுமி படுகாயம்

வாக்காளர்களை ஏற்றிச் சென்ற ஓட்டோ சிறுமியை மோதியதில் அவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

திருகோணமலை கந்தளாய் பிரதேசத்தில் நடந்த இந்த விபத்தில் பாத்திமா என்ற 5 வயதுச் சிறுமியே படுகாயமடைந்தார்.

ஓட்டோ சாரதியை பொலிஸார் கைது செய்து தடுத்து வைத்துள்ளனர். அத்துடன் மேலதிக விசாரணைகளை கந்தளாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)



# ஐக்கிய தேசியக் கட்சி தனி ஆட்சி 130 ஆசனங்களுடன் அமைக்கும்

## அமைச்சர் அகிலவிராஜ் நம்பிக்கை

கொழும்பு, பெப். 16

ஐக்கிய தேசியக் கட்சி 130 ஆசனங்களைக் கொண்டு தனித்து ஆட்சி அமைக்கும் பலத்ததுடன் உள்ளதாகக் கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தொடர்ந்து கருத்துக் கூறுகையில்:

உள்ளூராட்சி சபைத் தேர்தலின் பின் நாம் தனித்து ஆட்சி அமைப்போம் என்று ஒருபுறம் சுதந்திரக் கட்சியும் மறுபுறம் மஹிந்த அணியும் கூறி வருகின்றன. ஆட்சி அமைப்பதற்கு ஆகக் குறைந்தது எத்தனை ஆசனங்கள் தேவை என்றுகூட இவர்களுக்குத் தெரியாது. இவர்களின் இருக்கும் ஆசனங்களின் எண்ணிக்கைகூட இவர்களுக்குத் தெரியாது.

நாட்டின் நலன் கருதி பல வேலைத் திட்டங்களை மேற்கொள்வதற்காகவே நாம் சுதந்திரக் கட்சியுடன் இணைந்து ஆட்சி அமைத்துள்ளோம். எம்மால் தனித்து ஆட்சி அமைக்க முடியாத நிலையில் நாம் இல்லை. இப்போது நினைத்தாலும்கூட நாம் மிகவும்



இலகுவாக தனித்து ஆட்சி அமைப்போம்.

எம்மிடம் இப்போது இருப்பது 106 ஆசனங்கள்தான். ஆனால்,130 ஆசனங்களை திரட்டி எம்மால் தனித்து ஆட்சி அமைக்க முடியும். அந்த ஆசனங்களை எங்கிருந்து கொண்டுவர வேண்டும் என்று எமக்குத் தெரியும். யாரும் எதிர்பார்த்திராத தரப்பில் இருந்து உறுப்பினர்கள் எம்முடன் இணைவர்.

தனித்து ஆட்சி அமைக்க முடியுமா என்று எம்மைப் பார்த்து சவால் விடுபவர்கள் இந்த உண்மையை விளங்கிக் கொள்ள வேண்டும். அவர்கள் சவால் விடுத்தால் அதை ஏற்க நாம் தயார். எதுவித சிக்கலும் இல்லாமல் நாம் ஆட்சி அமைப்போம் என்று அவர்களுக்கு கூறிக் கொள்ள விரும்புகிறோம்.-என்றார்.

## இன்றைய கேலிச்சித்திரம்




# நுவரெலியாவில் 70 வீத வாக்குகள் பதிவாகின

நுவரெலியா, பெப். 11

நுவரெலியா மாவட்டத்தில் 12 சபைகளுக்குமான 306 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக நேற்றுக் காலை 7 மணிக்கு ஆரம்பித்த வாக்குப்பதிவு மாலை 4 மணியளவில் நிறைவுபெற்றது.

4 மணி வரை 70 வீதமான வாக்களிப்பு நிறைவடைந்ததாக நுவரெலியா மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியும், மாவட்ட செயலாளருமான ஆர்.எம். பி.புஸ்பகுமார தெரிவித்தார்.

காலை வேளையில் வாக்களிப்பில் மந்தமாக காணப்பட்டாலும், பகல் வேளையில் வாக்களிப்பு வீதம் அதிகரிகத்து காணப்பட்டது. 306 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக, 504 வாக்களிப்பு நிலையங்களில் வாக்காளர்கள் வாக்களிப்பு நடவடிக்கையில் ஈடுப்பட்டனர்.

விகிதாசார மற்றும் தொகுதிக் கலப்பு முறையில் நடைபெறும் இந்த தேர்தலில் தெரிவாகவுள்ள உறுப்பினர்கள் ஒரு உள்ளூராட்சி மன்றங்களுக்காக அளிக்கப்படும் வாக்குகளிலேயே தங்கியுள்ளது. உள்ளூராட்சி மன்றத்திற்குட்பட்ட ஒரு வட்டாரத்திற்கான வாக்குகள் வட்டார வாக்களிப்பு நிலையத்திலேயே எண்ணப்படும்.

பல வாக்களிப்பு நிலையங்கள் இருக்குமாயின் கணிசமாக வாக்குகளுள்ள நிலையங்களுக்கு கொண்டுசெல்லப்பட்டு ஒரே இடத்தில்வைத்து எண்ணப்படும். இருப்பினும் வாக்குகள் வெவ்வேறாகவே எண்ணப்படும்.

உள்ளூராட்சி சபை தேர்தலுக்கான நுவரெலியா மாவட்ட முதலாவது தேர்தல் முடிவுகள் இரவு 10 மணிக்கு பிறகு அறிவிக்கப்படும் என நுவரெலியா மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியும், மாவட்ட செயலாளருமான ஆர்.எம்.பி.புஸ் பகுமார மேலும் தெரிவித்தார். (ச)

# 62 பேரின் உறுப்புரிமைகள் எந்நேரமும் பறிக்கப்படலாம்

கொழும்பு, பெப். 11

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் 62 வேட்பாளர்களின் உறுப்புரிமை எச்சந்தர்ப்பத்திலும் பறிபோகும் ஆபத்து உள்ளதென பொலிஸ் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

லஞ்சம் கொடுத்தல், பலவந்தம் செய்தல், அச்சுறுத்தல் விடுத்தல் ஆகிய குற்றச்சாட்டுக்கள் காரணமாக 62 வேட்பாளர்கள் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இவர்களுக்கு எதிரான தண்டனை கடுமையாக அமையலாம். இவர்கள் குற்றவாளிகளென நிரூபிக்கப்பட்டால் இவர்கள் வெற்றி பெற்றாலும்கூட எச்சந்தர்ப்பத்திலும் இவர்களது உறுப்புரிமை நீக்கப்படலாம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச)

# அவன்கார்ட், ரக்னா லங்கா

## வழக்கு விசாரணை நாள் அறிவிப்பு

கொழும்பு, பெப். 11

அவன்கார்ட் நிறுவனத்தின் தலைவர் நிசங்க சேனாதிபதி மற்றும் ரக்னா லங்கா நிறுவனத்தின் முன்னாள் தலைவர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் பாலித பிரணாந்து ஆகியோருக்கு எதிரான வழக்கு எதிர்வரும் 14 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு உயர்நீதிமன்ற நீதிபதி குருசிங்க முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இவ்வாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

2012ஆம் ஆண்டு தொடக்கம் 2014ஆம் ஆண்டு வரையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பெரிய ஊழல் மோசடி சம்பவங்கள் தொடர்பில் இவர்கள் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. (ச)

# தொடர்ச்சிகள்

### தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று நாடு முழுவதும் இடம்பெற்றது. இதில் பெருவாரியான மக்கள் வாக்களித்தனர்.

முன்னதாக வெளியான தகவல்களின் அடிப்படையில் யாழ். மாநகரசபை, வலி. வடக்கு, வலி. கிழக்கு, வலி. மேற்கு, ஊர்காவற்றுறைப் பிரதேச சபைகளை கூட்டமைப்பு கைப்பற்றியுள்ளது. பருத்தித்துறை, சாவகச்சேரி நகர சபைகளை அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கைப்பற்றியுள்ளது. நெடுந்தீவு பிரதேச சபையை மாத்திரம் ஈ.பி.டி.பி. கைப்பற்றியுள்ளது.

யாழ்ப்பாணத்தின் ஏனைய பிரதேச சபைகளிலும், வடக்கின் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களிலும், கிழக்கில் தமிழ் மக்கள் அதிகம் வாழும் பிரதேசங்களிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கைப்பற்றியுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேசபை 6 ஆசனங்களையும் கரைச்சிப் பிரதேச சபை 16 ஆசனங்களையும் பூநகரி பிரதேசசபை 11 ஆசனங்களையும் கூட்டமைப்பு கைப்பற்றியுள்ளது. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் சுயேச்சைக்குழு பச்சிலைப்பள்ளியில் 2, கரைச்சியில் 5 ஆசனங்களையும் கைப்பற்றியுள்ளது.

கிழக்கில் மட்டக்களப்பு மாநகர சபையின் 20 வட்டாரங்களில் 17ஐ இலங்கைத் தமிழரசுக் கட்சியே கைப்பற்றியுள்ளது. (ச)

### நாடளாவிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்துள்ளனர்.

இம்முறை தேர்தலில் பராதூரமான சம்பவங்கள் எவையும் இடம்பெறவில்லை. மிக அமைதியான முறையில் தேர்தலை நடத்தியமைக்காக மக்களுக்கு நன்றியைத் தெரிவிப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

அத்துடன் அமைதியான முறையில் தேர்தலை நடத்த உதவிய பொலிஸ், முப்படைகளுக்கும் அவர் நன்றியைத் தெரிவித்தார். மேலும் மக்கள் விரும்பும் முறையில் இம்முறை அமைதியாகத் தேர்தல் நடந்ததாகவும் அவர் சுட்டிக் காட்டினார். (ச)

### பருத்தித்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆசனத்தையும் கைப்பற்றின.

இதேபோன்ற பருத்தித்துறை நகர சபையிலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியே முன்னிலையில் உள்ளது.

### யாழில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணப்படுகின்றது. இங்கு 39.3 வீதமானோரே வாக்களித்துள்ளனர்.

யாழ். மாநகரசபையில் 68.6 வீதம், வல்வெட்டித்துறையில் 66 வீதம், பருத்தித்துறை நகர சபையில் 71.2 வீதம், சாவகச்சேரி நகர சபையில் 66.7 வீதம், காரைநகர் பிரதேச சபையில் 69.7 வீதம், வேலணையில் 69.4 வீதம், வலி. மேற்கில் 66.1 வீதம், வலி. தென்மேற்கில் 67.3 வீதம், வலி. தெற்கில் 64.6 வீதம், வலி. கிழக்கில் 64 வீதம், வடமராட்சி தென்மேற்கில் 60.7 வீதம், பருத்தித்துறையில் 63.4 வீதம், சாவகச்சேரியில் 59.8 வீதம், நல்லூரில் 64.2 வீதம் என வாக்குப் பதிவுகள் இடம்பெற்றுள்ளன.

இதேவேளை பல தேர்தல் விதி மீறல்கள் இடம்பெற்றுள்ள போதிலும் பாரதூரமான சம்பவங்கள் எவையும் பதிவாகவில்லை. கிடைத்த முறைப்பாடுகளில் பல கட்சிகளின் வேட்பாளர்கள், ஆதரவாளர்களை குற்றஞ்சாட்டியதாகவே இருந்ததாக அவர் தெரிவித்தார். இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பில் தேர்தல்கள் கண்காணிப்புக் குழுக்களுக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளன. (ச)

### இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார். வாக்களிப்பு, அமைதியான முறையில் இடம்பெற்றது என்று தெரிவித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அதிகாரி ருவான் குணசேகர, பெரும் அசம்பவாவிதங்கள் எவையும் இடம்பெறவில்லை என்றும் கூறினார்.

### வேண்டுமென்றே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டம் மாந்தை கிழக்குப் பிரதேச சபையின் உத்தியோகபூர்வ முடிவுகள் அறிவிக்கப்பட்டன. அதன் பின்னர் நீண்ட நேரமாக எந்த உத்தியோகபூர்வ முடிவும் வெளியாகவில்லை.

வட்டார ரீதியான முடிவுகள் எண்ணி முடிக்கப்பட்டு அறிவிக்கப்பட்டபோதும் அவை குறித்து தேர்தல்கள் திணைக்களம் எந்த அறிவிப்பையும் வெளியிடவில்லை.

இதனிடையே தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய எந்த முடிவுகளையும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் முன்பாக எந்த ஊடகங்களும் வெளியிடக் கூடாது என நள்ளிரவு நெருங்கும் வேளையில் அறிவித்திருந்தார்.

தென்னிலங்கையில் மகிந்த ராஜபக்ஷ எழுச்சி பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அடுத்த இடத்திலும் இதற்கு அடுத்த இடத்தில் ஐக்கிய தேசியக் கட்சியும் இருக்கின்றன என உத்தியோகப்பற்றற்ற தகவல்கள் வெளியாகின. இதனால் வேண்டுமென்றே தேர்தல்முடிவுகள்தாமதிக்கப்பட்டனவா? எனக் கேள்விகள் எழுப்பப்பபட்டன. (ச)



# இஸ்ரேல், ஈரான் நாடுகளின் விமானங்கள் வீழ்த்தப்பட்டன

இஸ்ரேலின் போர் விமானம் ஒன்றும் ஈரானின் ஆளில்லா விமானம் ஒன்றும் நேற்று சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளன.

இஸ்ரேலை உளவு பார்ப்பதற்காக சிரியாவில் இருந்து ஈரான் ஆளில்லா விமானம் ஒன்றை அனுப்பியது. இந்த விமானத்தை இடைநடுவிலேயே இஸ்ரேல் தாக்கி அழித்தது.

இத்தாக்குதலைத் தொடர்ந்து சிரியாவில் உள்ள ஈரான் இராணுவ முகாம்கள் மீது இஸ்ரேல் போர் விமானங்கள் தாக்குதலை நடத்தின. இந்தத் தாக்குதலை நடத்திய விமானங்களில் ஒன்றை தமது இராணுவம் சுட்டு வீழ்த்தியதாக சிரியா அறிவித்துள்ளது. (ச)

# மணிரத்னம் படத்தின் முதல்பார்வை வெளியீடு




சென்னை, பெப். 11

விஜய் சேதுபதி, அரவிந்தசாமி, சிலம்பரசன், ஜோதிகா எனப் பெரும் நட்சத்திர பட்டாளத்தின் நடிப்பில் இயக்குநர் மணிரத்தினத்தின் இயக்கத்தில் உருவாகும் படத்தின் முதல் பார்வை நேற்று வெளியானது.

பெரும் பொருட்செலவில் தயாராகும் இந்தப் படத்துக்கு "செக்கச் சிவந்த வானம்" எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இப்படத்திற்கு ஏ.ஆர். ரஹ்மான் இசையமைக்கிறார். அனைத்துப் பாடல்களையும் கவிஞர் வைரமுத்து எழுதுகிறார். நாளை படப்பிடிப்பு ஆரம்பமாகிறது. (ச)

# தென்கொரிய ஜனாதிபதிக்கு வடகொரியா வருமாறு அழைப்பு



பியோங்யாங், பெப். 11

தென்கொரிய ஜனாதிபதி மூன் ஜே இன்ஐ வடகொரியாவுக்கு வருமாறு அந்நாட்டின் ஜனாதிபதி கிம் ஜோங் உன் அழைப்பு விடுத்துள்ளார்.

தென்கொரியா சென்றுள்ள சகோதரி கிம் ஜோங் நாம் மூலமாக அனுப்பிய கடிதத்திலேயே இந்த அழைப்பை அவர் விடுத்துள்ளார்.

குளிர்கால ஒலிம்பிக் போட்டி தென்கொரியாவின பியோங்யாங் நகரில் நடக்கிறது. இதில் வடகொரியாவின் பிரதிநிதியாக அந்நாட்டு ஜனாதிபதியின் சகோதரி பங்கேற்றுள்ளார்.

நேற்றுமுன்தினம் தென்கொரியா சென்ற அவரிடமே தனது அழைப்புக்கடிதத்தை அனுப்பியுள்ளார். ஒரே தேசமாக இருந்து பிரிந்த இந்த நாடுகள் தொடர்ந்து பகைமை பாராட்டி வருகின்றன. இந்நிலையில் வடகொரியாவின் இந்த அழைப்பு உலக அவதானிகளின் புருவத்தை உயர்த்தியுள்ளது. (ச)



காஷ்மீரில் தற்கொலை தாக்குதல்

# இந்திய சிப்பாய்கள் இருவர் பலி

காஷ்மீர், பெப். 11

பாகிஸ்தான் பயங்கரவாதிகள் நடத்திய தற்கொலைத் தாக்குதலில் இந்திய இராணுவ சிப்பாய்கள் இருவர் உயிரிழந்தனர். அதிகாரியின் மகள் ஒருவர் உட்பட நால்வர் படுகாயமடைந்தனர்.

நேற்று அதிகாலை 4.30 மணியளவில் சுஜ்வான் பிரதேசத்தில் உள்ள முகாம் ஒன்றிலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றது.

இந்தத் தாக்குதலை இரண்டு அல்லது மூன்று தற்கொலைப் படையினர் நடத்தியிருக்கலாம் எனக் கூறப்படுகின்றது.

இந்திய நாடாளுமன்றத்துக்குள் புகுந்து தாக்குதல் நடத்திய அப்சல் குரு தூக்கிலிடப்பட்ட 5 ஆம் ஆண்டு நினைவுநாள் நேற்றாகும். இதையொட்டியே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகின்றது. (ச)

# ஸ்ரேயாவுக்கு டும் டும் டும்

சென்னை, பெப். 11

நடிகை ஸ்ரேயாவும் அவரின் ரஷ்ய காதலரும் வரும் மார்ச் மாதம் திருமணத்தில் இணையவுள்ளனர்.

தற்போது தனது வருங்கால கணவரின் உறவினர்களைச் சந்திப்பதற்காக அவர் ரஷ்யா சென்றுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

2001 இல் வெளியான இஷ்டம் தெலுங்குப் படத்தில் நாயகியாக அறிமுகமான ஸ்ரேயா. 2003 இல் எனக்கு 20 உனக்கு 18 படம் மூலம் தமிழில் அறிமுகமாகி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)



# வடகொரிய பிரதிநிதியை தவிர்த்தது அமெரிக்கா



பியோங்யாங், பெப். 11

குளிர்கால ஒலிம்பிக் போட்டி தென்கொரியாவின் பியோங்யாங் நகரில் நடக்கின்றன. இந்நிகழ்வின் தொடக்க விழா நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றது.

இதன்போது தென்கொரிய ஜனாதிபதி உத்தியோக பூர்வ விருந்து ஒன்றை அளித்தார். இந்நிகழ்வில் வடகொரியாவின் சார்பில் ஜனாதிபதி கிம் ஜோங் உன்னின் சகோதரி பங்கேற்றிருந்தார்.

அமெரிக்காவின் துணை ஜனாதிபதி மைக் பென்ஸும் இந்த விருந்தில் பங்கேற்றிருந்தார். அவர் வடகொரிய ஜனாதிபதியின் சகோதரி கிம் ஜோங் நாமை சந்திக்கவோ, கைகுலுக்கவோ தவிர்த்து விட்டார்.

மேலும், விருந்து தொடங்கிய ஐந்து நிமிடங்களிலேயே அவர் அங்கிருந்து வெளியேறிவிட்டார்.

எனினும் இவர்கள் இருவரும் போட்டி தொடக்க விழாவை அருகருகே அமர்ந்து பார்வையிட்டிருந்தனர். (ச)

# அமெரிக்க பட்ஜெட் நிறைவேற்றம்

## முடக்கமும் முடிவுக்கு வந்தது

அமெரிக்காவின் பட்ஜெட் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்டது. இதன் மூலம் சுமார் 5 மணித்தியாலம் முடக்கப்பட்ட அரச நிர்வாகமும் முடிவுக்கு வந்தது.

அமெரிக்காவின் "செலவுக்கான நிதி ஒதுக்கீடு" (பட்ஜெட்) ஜனவரி 20 ஆம் திகதி செனட் சபையில் தோல்வியடைந்தது. இதனால் அமெரிக்க அரச நிர்வாகம் 3 நாள்கள் முடங்கியது. குடியரசுக் கட்சி, ஜனநாயகக் கட்சிகளின் தலைவர்களிடையே எட்டப்பட்ட உடன்படிக்கையைத்தொடர்ந்து இம்மாதம் 8 ஆம் திகதி வரையான செலவினங்கள் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டது.

இனி வரும் காலத்தில் இவ்வாறான முடக்கம் ஏற்படுவதைத் தவிர்க்க இரண்டு வருடங்களுக்கான செலவீன நிதி ஒதுக்கீட்டை நிறைவேற்ற ட்ரம்பின் அரசு முடிவு செய்தது. ஜனநாயகக் கட்சியும் இதற்கு நிபந்தனைகளுடன் ஆதரவளித்தது.

ஆனால் எதிர்பாராத திருப்பமாக செனட் சபையில் ஆளும் கட்சி உறுப்பினரான ரேண்ட் போல், தான் அளித்த திருத்தங்கள் குறித்து விவாதிக்குமாறு கோரிக்கை விடுத்தார். இதனால் சிக்கல் எழுந்தது. நீண்ட நேரம் நீடித்த இழுபறியைத் தொடர்ந்து 71 உறுப்பினர்கள் செலவின நிதி ஒதுக்கீட்டுக்கு ஆதரவளித்தனர்.

இந்தச் சட்டம் பிரதிநிதிகள் சபையில் சட்டமாக கையளிக்கப்பட்ட போதும், காலக்கெடு முடிவடைந்ததால், நேற்றுமுன்தினம் அதிகாலை தொடக்கம் அரச நிர்வாகம் முடங்கியது. தொடர்ந்து நடந்த நீண்ட விவாதத்தின் பின்ன 240 உறுப்பினர்களின் ஆதரவுடன் பட்ஜெட் நிறைவேறியது. 186 பேர் எதிராக வாக்களித்தனர். இதன்மூலம் 5 மணி நேரத்துக்கும் மேலாக நீடித்த அரசு நிர்வாக முடக்கம் நீங்கியது. அமெரிக்க நாடாளுமன்றத்தில் பிரதிநிதிகள் சபையில் 435 உறுப்பினர்களும், செனட் சபையில் 100 உறுப்பினர்களும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)




# வங்கப் புலிகளை அடக்கிய இலங்கை

டாக்கா, பெப்.11

பங்களாதேஷ் அணிக்கெதிரான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் 2 ஆவது போட்டியில் 215 ஓட்டங்களால் வெற்றிபெற்ற இலங்கை அணி 1-0 என தொடரைக் கைப்பற்றியது.

ரங்கண ஹேரத் மற்றும் அகில தனஞ்சய ஆகியோர் சுழலில் மிரட்ட பங்களாதேஷின் 2 ஆவது இன்னிங்ஸ் முடிவுக்கு வந்தது.பங்களாதேஷ் அணிக்கெதிரான 2 ஆவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி 339 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நிர்ணயித்திருந்தது.

பங்களாதேஷுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி அவ்வணியுடன் 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்று விளையாடி வருகின்றது.

இரு அணிகளுக்குமிடையில் சிட்டகொங்கில் இடம்பெற்ற முதல் டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்தது.

இந்நிலையில் இரு அணிகளுக்குமிடையிலான 2 ஆவது டெஸ்ட் போட்டி பங்களாதேஷின் டாக்காவில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இலங்கை அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 222 ஓட்டங்களைப் பெற்றது.

இந்நிலையில் பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி சகல விக்கட்டுக்களையும் இழந்து 110 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

இலங்கை அணி சார்பில் பந்து வீச்சில் சுரங்க லக்மால் மற்றும் அகில தனஞ்சய ஆகியோர் தலா 3 விக்கட்டுக்களை வீழ்த்தினர்.

110 ஓட்டங்களால் முன்னிலை வகித்த இலங்கை அணி தனது 2 ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்தது.

தனது 2 ஆவது இன்னிங்ஸில் இலங்கை அணி அனைத்துவிக்கெட்டுளையும் இழந்து 226 ஓட்டங்களைப்பெற்றது.

இதையடுத்து 339 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கு பங்களாதேஷ் அணிக்கு இலங்கை அண்யால் நிர்ணயிக்கப்பட்டது.

போட்டியின் 3 ஆவது நாளான நேற்று 339 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 123 ஓட்டங்களைப்பெற்று 215 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

இலங்கை அணி சார்பில் பந்து வீச்சில் அசத்திய அகில தனஞ்சய 5 விக்கெட்டுகளையும் ரங்கன ஹேரத் 4 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

தொடரின் ஆட்டநாயகனாகவும் போட்டியின் ஆட்ட நாயகனாகவும் ரொஷான் சில்வா தெரிவுசெய்யப்பட்டார்.

இதில், அடுத்தடுத்த ஆட்டங்களில் அருமையாக ஆடிய ரொஷேன் சில்வா தொடர்ச்சியாக தனது நான்கு அரைச் சதங்களைப் பூர்த்தி செய்திருந்தார்.

இந்நிலையில் சுழல் மன்னன் ரங்கன ஹேரத் டெஸ்ட் வரலாற்றிலேயே அதிதிறமையான இடது கை சுழற்பந்து வீச்சாளர் என்ற உலக சாதனை படைத்துள்ளார். அவர் இது வரை 415 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# ஆஸி அட்டகாசம்!

மெல்பேர்ன், பெப்.11

மெல்பேர்னில் நடைபெற்ற ரி-20 போட்டியில் இங்கிலாந்தை 7 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி அவுஸ்ரேலியா இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

ரி- 20 முத்தரப்பு தொடரின் 3 ஆவது ஆட்டம் மெல்பேர்ன் மைதானத்தில் நேற்று நடைபெற்றது. இதில் அவுஸ்ரேலியா-இங்கிலாந்து அணிகள் மீண்டும் மோதின.



முதலில் களம் இறங்கிய இங்கிலாந்து 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட் இழப்புக்கு 137 ஓட்டங்கள் சேர்த்தது. இங்கிலாந்து அணி சார்பில் பட்லர் 46 , பில்லிங்ஸ் 29 ஓட்டங்களைச் சேர்த்தனர். அவுஸ்ரேலியா அணி சார்பில் கேன் ரிச்சர்ட்சன் 3 விக்கெட்டும், ஸ்டேன்லேக் 2 விக்கெட்டும் வீழ்த்தினார்கள்.

பின்னர் 138 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் அவுஸ்ரேலியாவின் டேவிட் வோர்னர், ஷோர்ட் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். வோர்னர் 2 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். அடுத்து ஷோர்ட் உடன் கிறிஸ் லின் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தியது. கிறிஸ் லின் 19 பந்தில் 4 பவுண்டரி, 2 சிக்ஸருடன் 31 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். லின் அவுட்டாகும்போது அவுஸ்ரேலியா 5.3 ஓவரில் 51 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

3 ஆவது விக்கெட்டுக்கு ஷோர்ட் உடன் மக்ஸ்வெல் ஜோடி சேர்ந்தார். ஷோர்ட் நிதானமாக விளையாட மக்ஸ்வெல் அதிரடி காட்டினார். அவர் 26 பந்துகளில் 39 ஓட்டங்கள் அடித்தார்.

4 ஆவது விக்கெட்டுக்கு ஷோர்ட் உடன் ஆரோன் பிஞ்ச் ஜோடி சேர்ந்து அணியை வெற்றிக்கு இட்டுச் சென்றனர். அவுஸ்திரேலியா 14.3 ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு 138 ஓட்டங்கள் எடுத்து 7 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

ஏற்கனவே நியூஸிலாந்து, இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் வெற்றி பெற்றிருந்ததால் மூன்று வெற்றிகளுடன் இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது. அவுஸ்திரேலியா தனது கடைசி லீக் ஆட்டத்தில் நியூஸிலாந்தை 16 ஆம் திகதி எதிர்கொள்கிறது.

(அ)

# 100/100




டேர்பன், பெப்.11

நூறாவது போட்டியில் நூறு ஓட்டங்கள் குவித்த ஒரே வீரர் என்ற பெருமையை இந்திய அணியின் ஆரம்ப வீரர் ஷிகர் தவான் பெற்றுள்ளார்.இந்திய - தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான நான்காவது ஒரு நாள் போட்டி தென்னாபிரிக்காவில் நேற்று நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணியின் ஆரம்ப வீரர்களாக ஷிகர் தவான், ரோஹித் ஷர்மா ஆகியோர் களமிறங்கினர்.

ரபாடாவுக்கும் ரோஹித் ஷர்மாவுக்கும் என்ன ராசிப் பொருத்தமே தெரியவில்லை, இந்த முறையும் ரோஹித்தின் விக்கெட்டை ரபாடாவே வீழ்த்தினார்.

இந்தச் சுற்றுப் போட்டியில் மொத்தமாக ஆறு முறை ரோஹித்தின் விக்கெட்டை ரபாடாவே வீழ்த்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்து, ஷிகர் தவானுடன் ஜோடி சேர்ந்த அணித் தலைவர் விராட் கோஹ்லியும் நேர்த்தியான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

75 ஓட்டங்கள் பெற்றிருந்த நிலையில் கோஹ்லி ஆட்டமிழந்தார்.

எனினும் தனது நூறாவது போட்டியில் விளையாடிய ஷிகர் தவான், சிறப்பாக ஆடி 100 ஓட்டங்களைப் பெற்றார். இதன்மூலம், நூ . றாவது போட்டியொன்றில் நூறு ஓட்டங்களைப் பெற்ற முதல் வீரர் என்ற பெருமையை ஷிகர் தவ்ான் படைத்தார். இது அவரது பதின்மூன்றாவது ஒருநாள் சதமாகும்.

109 ஓட்டங்களுடன் ஷிகர் தவான் ஆட்டமிழக்க, அணியின் ஓட்ட வேகம் குறைய ஆரம்பித்தது. 50 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுக்களை இழந்து இந்திய அணி, 289 ஓட்டங்களை எடுத்திருந்தது. பதிலளித்து ஆடிய தென்னாபிரிக்கா, வழக்கம் போல விக்கெட்டுகளைப் பறிகொடுத்து, இந்தச் செய்தி அச்சுக்குப் போகும் வரை 4 விக்கெட் இழப்புக்கு 124 ஓட்டங்களை எடுத்திருந்தது. இந்தப் போட்டியில் இந்தியா வென்றால், முதன் முதலாக தென்னாபிரிக்காவில் வைத்து அந்த நாட்டை தொடரில் ஒன்றில் தோற்கடித்த சாதனையை எட்ட முடியும்.(அ)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 11.02.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.